இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஊனியல்புக்கு ஏற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது. ஆனால் கடவுளின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருந்தால், நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல், ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல. பாவத்தின் விளைவாக உங்கள் உடல் செத்ததாயினும், கிறிஸ்து உங்களுள் இருந்தால், நீங்கள் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுவீர்கள். ( உரோ 8:8-9)

# நம் இறைத்தந்தையிடம் திரும்பிச் செல்வோம்- திருத்தந்தை வேண்டுகோள்

**வத்திக்கான்**: கொரோனா தொற்றுக் கிருமியால் மிக அதிகமாக தாக்கப்பட்டுள்ள, இத்தாலியின் பெர்கமோ பகுதியில் நலப் பணியாற்றும் அனைவரையும் இத்திருப்பலியில் சிறப்பாக நினைத்துச் செபிப்போம் என்று, மார்ச் 20, இவ்வெள்ளி காலையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியின் துவக்கத்தில் தெரிவித்தார்.

இந்த நெருக்கடி காலக்கட்டத்தை நிர்வகிக்கும் அரசுத் தலைவர்கள், அடிக்கடி புரிந்து கொள்ளப்படாமையை எதிர்கொள்கின்றனர், ஆனால் நாம் இந்தச் சூழலிலிருந்து வெளிவருவதற்கு நமக்கு உதவும் தூண்களாகவும், இந்த நெருக்கடியிலிருந்து நம்மைப் பாதுகாப்பவர்களாகவும் இருக்கும் அவர்களுக்காகவும் செபிப்போம் என்றும் திருத்தந்தை கூறினார்.

**மறையுரை**

மேலும், இத்திருப்பலியில், இறைவாக்கினர் ஓசேயா நூலிலிருந்து வாசிக்கப்பட்ட முதல் வாசகத்தை அடிப்படையாக வைத்து மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வா" (14:2) என்ற சொற்கள், 75 ஆண்டுகளுக்கு முன், Carlo Buti என்பவர் பாடிய பாடலை எப்போதும் நினைவுபடுத்துகின்றது என்று கூறினார்.

**குழந்தைப்பருவ பாடல்**

'உனது தந்தையிடம் திரும்பி வா, அவர் உனக்கு ஒரு தாலாட்டுப் பாடுவார்' என்ற பாடலை (பாடல்-Torna Piccina Mia), புவனோஸ் அய்ரஸ் நகரில் வாழ்ந்த இத்தாலிய குடும்பங்கள் கேட்பதுண்டு

மற்றும், அப்பாடலை அக்குடும்பங்கள்



மிகவும் விரும்பின என்று கூறியத் திருத்தந்தை, அப்பாடல், நம் இறைத்தந்தை, தன்னிடம் திரும்பி வா என்று நம்மிடம் சொல்வதாக உள்ளது என்று எடுத்துரைத்தார்.

கடவுள் உங்கள் தந்தை, அவர் நீதிபதி அல்ல, அவரின் வீட்டிற்குத் திரும்பிப் போங்கள் என்று மறையுரையில் கூறியத் திருத்தந்தை, எல்லாப் பணத்தையும் எடுத்துக்கொண்டு தொலைதூரம் சென்று அவற்றை வீணாக்கிய மகனுக்காகக் காத்திருக்கும் தந்தையைப் பற்றிக் கூறும், காணாமல் போன மகன் பற்றிய உவமை பற்றியும் குறிப்பிட்டார்.

**இறைத்தந்தையின் கனிவு**

காணாமல்போன மகனுக்காகக் காத்திருந்த தந்தை காட்டிய கனிவு போன்று, கடவுளும் தம் கனிவை, குறிப்பாக இத்தவக்காலத்தில் காட்டுகிறார் என்றும், நம்மையே நாம் பரிசோதித்துப் பார்த்து இறைத்தந்தையை நினைத்து, நம் அப்பாவிடம் திரும்பிச் செல்வதற்கு இத்தவக்காலம் ஏற்ற காலம் என்றும் திருத்தந்தை கூறினார்.

பல தவறான செயல்களைச் செய்திருப்பதால், தந்தையே உம்மிடம் திரும்பிவர வெட்கப்படுகிறேன் என்று நாம் சொல்கையில், அவரோ, திரும்பி வா, உனது குறைகளை குணப்படுத்துகிறேன் என்று சொல்கிறார் என்றுரைத்த திருத்தந்தை, நான் அவர்கள் மேல் உளமார அன்பு கூர்வேன், அவர்கள் மேலிருந்த என் சினம் தணிந்துவிட்டது (ஓசேயா 14:4) என்று ஆண்டவர் கூறுகிறார் என்றார்.

நம் வாழ்வின் பல காயங்களை இறைத்தந்தைக் குணப்படுத்துகிறார், கடவுளிடம் திரும்பிச்செல்லுதல் என்பது, அவரின் அரவணைப்பிற்குச் செல்வதாகும் என்று கூறியத் திருத்தந்தை, அருள்பணியாளர்கள் இல்லாத சமயத்தில் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறும் முறை பற்றியும் விளக்கினார்.

திரும்பி வா என்ற சொற்கள், நம் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கும் என்று, தான் நம்புவதாகவும், கடவுள், திரும்பிவரும் தன் மகனுக்காக விழாக் கொண்டாடத் தயாராய் இருக்கிறார் என்றும் தெரிவித்து மறையுரையை நிறைவு செய்தார், திருத்தந்தை பிரான்சிஸ். இத்திருப்பலியின் இறுதியில் திருநற்கருணை ஆராதனை வழிபாட்டை சில நிமிடங்கள் நிறைவேற்றி, திருநற்கருணை ஆசீரையும் திருத்தந்தை வழங்கினார்.

*-மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

## "அருள்பணியாளர் இல்லாதபோது ஒப்புரவு அருளடையாளம்

அவசரகால நேரங்களில் ஒப்புரவு அருளடையாளத்தை எவ்வாறு பெறுவது என்பது குறித்து, மார்ச் 20, இவ்வெள்ளி காலையில், சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் விளக்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவுக்குமுன் உங்களில் பலர் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறச் செல்வீர்கள், கொரோனா தொற்றுக் கிருமி தாக்கத்தால் எல்லாரும் வீடுகளிலேயே இருக்கவேண்டிய நெருக்கடியான சூழல் ஏற்பட்டுள்ளது, நான் ஆண்டவரோடு சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறேன், அவர் என்னைத் தழுவிக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன், அருள்பணியாளர் இல்லாமல் இதை நான் எப்படி செய்வது என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகின்றது என்று திருத்தந்தை கூறினார்.

**கடவுளோடு உரையாடுங்கள்**

அருள்பணியாளர் இல்லாமல் கடவுளின் மன்னிப்பை பெறும் முறை பற்றி மறைக்கல்வி கூறுவதுபோல் செயல்படுங்கள், ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கு ஓர் அருள்பணியாளரைக் கண்டுபிடிக்க முடியவில்லையெனில், கடவுளோடு உரையாடுங்கள், அவர் உங்கள் தந்தை, “ஆண்டவரே, ____________ ( பாவங்களை அறிக்கையிடுதல்) என்னை மன்னித்தருளும்" என்று அவரிடம் கூறுங்கள் என்று எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

உள்ளம் நொறுங்குண்டவர்களாய், உங்கள் முழு இதயத்தோடு ஆண்டவரிடம் மன்னிப்பை இறைஞ்சுங்கள், பிறகு ஒருநாள் ஒப்புரவு அருளடையாளம் பெறச் செல்வேன் என்று அவரிடம் வாக்குக் கொடுங்கள் என்று உரைத்தத் திருத்தந்தை, நீங்கள் கடவுளின் அருளுக்கு உடனடியாகத் திரும்புவீர்கள், நீங்களே அவர் பக்கம் ஈர்க்கப்படுவீர்கள் என்று ஆறுதல் கூறினார்.

## 'நீங்கள் அஞ்சாதீர்கள்' திருத்தந்தை பிரான்சிஸ்

**வத்திக்கான்**: கொரோனா வைரஸ் காரணமாக இந்த நெருக்கடி நாட்களில் திருத்தந்தை தனது மனத்துயரைப் பற்றி பகிர்கிறார்: "நமது இல்லங்களுக்குள் நுழைந்த இருள் விரைவில் மறைந்து விடும், இதயத்தில் காயங்களுடன் ஒன்று பட்ட மனிதநேயம் மீண்டும் உயர்வுப் பெறும்" என்று நம்பிக்கையளித்துள்ளார்.

நாம் அனைவரும், "இங்கே நாங்கள் அழுகிறோம், நாங்கள் துன்புறுகிறோம்" என்று புலம்புகிறோம். இந்நிலையில் ஒட்டுமொத்த மனிதகுலமாக மட்டுமே நாம் இந்த சூழ்நிலையிலிருந்து வெளியேற முடியும்". இந்த காரணத்திற்காக, நாம் "ஒன்றித்த உணர்வோடு ஒருவரையொருவர் பார்க்க வேண்டும்", அதன்படி செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார். இந்த அவசரகாலச் சூழலை திருத்தந்தை கவலையுடன் கவனித்து வருகிறார். அவர் தொடர்ந்து தொலைப்பேசியில், "ஒளி வரும் என்றும், அவ்வொளி எல்லோருடைய இல்லத்திலும் நுழைந்த இருளை ஒளிரச் செய்யும்" என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளார்.. குறிப்பாகத் திருப்பலிகள் இடைநிறுத்தப்பட்ட காலத்திற்குப் பிறகு, இது "போருக்குப் பிந்தைய காலம் போன்று காணப்படும்" என்று அவர் மேலும் நினைவூட்டினார்.

நாம் மீண்டும் நம்மை பழைய நிலைக்குக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கும் என்று அவர் கேட்டுக்கொண்டார். இக்காலக் கட்டத்தில் எல்லா மனிதர்களிடையேயும் நிலவும் சகோதரத்துவமும், நம்பிக்கையும் ஒரு போதும் நழுவிவிடக் கூடாது என்றும், வாழ்க்கையில் "இருண்ட மண்டலங்கள், இருண்ட தருணங்கள்” உள்ளன என்பதை நாம் பல முறை மறந்து விடுகிறோம். இவை வேறொருவருக்கு மட்டுமே நிகழும் என்று நாம் நினைக்கிறோம் என்றும், இது எல்லோருக்கும் ஒரு இருண்ட காலம். இக்காலத்தை தைரியத்துடன் எதிர்கொள்ள வேண்டும் என்றும் திருத்தந்தை பகிர்ந்து கொண்டார்..

# பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் கீழ் கோலாலம்பூர் மாமறை மாவட்டதிற்கான இறப்பு & திருமணச் சடங்கு விதிமுறைகள் (சுருக்கம்)

பேராயர் ஜூலியன் லியாவ் இறப்பு மற்றும் திருமணம் ஆகியவற்றுக்குக் கீழ்க்கண்ட விதிமுறைகளைத் தற்காலத்தில் பின்பற்ற உத்தரவு பிறப்பித்துள்ளார்

**1. இறப்பு**
**பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் உத்தரவின் கீழ் இறப்பு இறுதிச் சடங்குகளுக்கான புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் (மார்ச் 19, 2020)**

அ) இறப்பு கூடங்களில் (Funeral Parlour) அல்லது இல்லங்களில் ஏழு நாள்கள் இறைவேண்டல் வழிபாடு தடைசெய்யப் படுகிறது.

- குடும்பத்தினர் தங்கள் சொந்த இறை வேண்டல்களை தனிப்பட்ட முறையில் நிறைவேற்றலாம்.

- குடும்ப பயன்பாட்டிற்காக இறை வேண்டல் புத்தகங்களை பங்குகளில் பெற்றுக்கொள்ளலாம்.

- சம்பத்தப்பட்ட குடும்பத்தினர் சுருக்க மாக இறுதி மரியாதைச் செலுத்தக் கூடிய வருகையாளர்களை மட்டும் வரவேற்பது சிறப்பு.

ஆ) இறப்பு இறுதிச் சடங்குகள் யாவும் இல்லம் அல்லது இறப்பு கூடத்திற்கான வழிபாட்டு வழிமுறையினைப் பின் பற்றி, இல்லம் அல்லது இறப்பு கூடத்தில் நிறை வேற்றப்பட வேண்டும்.

- அவ்வேளையில் அங்குத் திருப்பலியோ அல்லது நற்கருணையோ வழங்கப்படாது.

- இது பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் வழிகாட்டுதலின் படி, நெருங் கிய குடும்ப உறுப்பினர்கள் மட்டும் கலந்துக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

- இந்த ஆணையின் படி ஆலயத்தைப் பயன்படுத்த முடியாது.

இ) பிற பொது சுகாதார முன்னெச்சரிக் கைகள் (சமூக விலகல் போன்றவை) பின்பற்றப்பட வேண்டும்.

ஈ) இறப்புச் சடங்கிற்கும் வழிபாட்டுக்கும் வரும் வருகையாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள் குறித்து வைக்கப்பட வேண்டும்.

- இதில் பின்வரும் விவரங்கள் இருக்க வேண்டும்-பெயர், தொலைபேசி எண், தேதி, நேரம் போன்றவை. தேவைப்படும் வேளையில், அதிகாரிகள் தொடர்பு கொள்ள உதவுவதே இதன் நோக்கமாகும்.

**2. திருமணம்**
**பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் உத்தரவின் கீழ் திருமணங்களுக்கான வழிகாட்டுதல்கள் (மார்ச் 19, 2020)**

1. தம்பதியினர் தங்கள் திருமணங்களை பிற்காலத்திற்கு ஒத்திவைக்க ஊக்குவிக் கப்பட வேண்டும். திருமணத்தைத் தொடர



தம்பதிகள் வற்புறுத்தினால், பின்வரும் விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடை பிடிக்க வேண்டும்.

2 திருமணமானது (மணமக்கள் இருவரும் கத்தோலிக்கர்களாக இருந்தாலும்) நற் கருணை வழங்கப்படாத வழிபாடாகத்தான் இருக்கும். பொதுத் திருப்பலிகளின் இடைநீக்கம் இதற்குக் காரணமாகும்.

3. இந்த வழிபாடு நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கும் உறவினர்களுக்கும் மட்டுமே உரியதாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும். வருகையாளர் எண்ணிக்கை 50 நபர்களுக்கு மேல் இருக்கக் கூடாது. வருகையாளர் எண்ணிக்கை குறைவாக இருப்பது சிறப்பு.

4. ஆலயத்தில் இருக்கைகளைப் பொறுத்த வரை, வருகையாளர்கள் தங்களுக்கி டையே சற்று இடைவெளியிட்டு அமர வேண்டும்.

5. திருமண வழிபாட்டுக்கு வரும் வருகை யாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள் குறித்து வைக்கப் பட வேண்டும்.

6. அதில் பின்வரும் விவரங்கள் இருக்க வேண்டும்- பெயர், தொலைபேசி எண், தேதி, நேரம் போன்றவை.. தேவைப்படும் வேளையில், அதிகாரிகள் தொடர்புகொள்ள உதவுவதே இதன் நோக்கமாகும்.

# 'இது புதுப்பிக்கப்பட ஏற்ற காலம்' அருள்தந்தை ஆல்பெர்ட் ஆரோக்கியசாமி

அன்பார்ந்த இறைமக்களே,

அனைவருக்கும் வணக்கம். இன்றைய (23-03-2020) இறை வாசகங்கள் மிகவும் அற்புதமாக நம்மை இவ்வுலகப் பார்வைக்கு அழைத்து வருகின்றன. இறைவாக்கினர் எசாயா வாயிலாக புதிய விண்ணுலகையும் புதிய மண்ணுலகையும் படைக்கிறேன் என்று கடவுள் கூறியதையும் அவரே தொடர்ந்து 'நான் எருசலேமை மகிழ்ச்சிக்குரியதாகவும் "தன் மக்களைப் பூரிப்பவர்களாகவும் படைக் கிறேன். நானும் எருசலேமை முன்னிட்டு மகிழ்ச்சியடைவேன்; என் மக்களைக் குறித்துப் பூரிப்படைவேன்; இனி அங்கே அழுகையும் கூக்குரலும் ஒருபோதும் கேட்கப் படா" (எசா 65: 17-21 என்று ரைத்ததையும் கேட்கிறோம்.

இந்த இக்காட்டான சூழலில், அனைவரும் கொரோனா கிருமியால் பாதிக்கப்பட் டிருக்கும் மக்களுக்காகவும், இந்த உலகைப் புதிய உலகாக இறைவன் படைப்பதற்கும், இந்த பாதிப்புகள் வாயிலாக நமக்கு வாய்ப்புக் கொடுக்கிறார். இந்த உலகப் பொது அமைப்புகள் அனைத்தும் அரசியல், பொருளாதாரம், சமூகவியல் மற்றும் சமயங்களுக்கிடையே சமத்துவம் எனும் உண்மையை உணர்ந்து, இறைவன் இந்த உலகைப் படைத்து, அதில் நம் ஒவ்வொருவரையும் அவரது சாயலில் படைத்துள்ளார் எனும் பேருண்மை யையும் அறிந்துணர்ந்து வாழ்வதற்கு ஆண்டவர் இயேசு நம் மத்தியில் செயல்படுகின்றார்.

இவ்வாறு நம் மத்தியில் செயலாற்றும் ஆண்டவர், இன்றைய நற்செய்தியில், தம் மகனுக்காக உதவிக் கேட்டு தம்மிடம் வந்த ஓர் அலுவலரிடம், "நீ புறப்பட்டு உன் இல்லத்திற்குச் செல்" (யோவா 4: 43-54). என்று கூறியதைக் கேட்கிறோம். அந்த இல்லம் ஆண்டவர் குடிகொண்டிருக்கும் நமது உடல், நமது குடும்பம். இந்தக் குடும்பத்தைப் புதுப்பித்தோமென்றால் இந்த உலகைப் புதுப்பிக்க நாம் அதிரடியாகச் செயல்படுகிறோம் என்பது பொருள்.

எனவே, இவ்வாறு உற்சாகத்துடன் மிகவும் இக்கட்டான இந்தச் சூழலில் நாம் செயல் படும் போது நமது வாழ்வும் குடும்பமும் உள்ளூரப் புதுப்பிக்கப்படுகிறன. இதன் விளைவாக ஒருநாள் சமுதாயமே புதுப்பிக் கப்படும், புதிய தோற்றம் பெறும் நிலை உருவாகும். தனிமனிதன் மாறினால் சமுதாயம் மாறும் என்பது வெள்ளிடை மலை. திருத்தந்தை பிரானசிஸ் அவர்கள் நமது பொது இல்லமாகிய இந்தப் பூமியைப் பாதுகாத்தல் எனும் கருத் தோட்டத்தில் "புகழனைத்தும் உமதே, ஆண்டவரே! (Laudato Si ) எனும் அவரது சுற்றுச் சூழல் பற்றிய சுற்று மடலில், இந்த பூமி நம் அனைவருக்குமான பொது இல்லம், இதை நாம் புதுப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். ஏனெனில், நாம் அனைவரும் விண்ணகத் தந்தையை நோக்கி, "விண்ணகத்திலுள்ள எங்கள் தந்தையே" என்று இறைவேண்டல் செய்கிறோம். அவர் நம் அனைவருக்கும் தந்தையாக உள்ளார், நாம் அனைவரும் அவரது பிள்ளைகள். இந்தப் புதிய சிந்தனையோடு நாம் செயல்படும்போது தான் நமது சிந்தனையும் செயல்பாடுகளும் மாறும், உறவு முறைகளும் மாற்றம் காணும்.



இந்த நெருக்கடியான சூழலில் இந்த கோரோனா வைரஸ் கைக்குலுக்காதீர்கள், மாறாக ஒருவர் ஒருவருக்குக் கைக்கூப்பி வணக்கம் சொல்லுங்கள் என்று நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறது. நாம் வணக்கம் செலுத்தும் போது அடுத்தவரிடமிருக்கும் தூய ஆவியாரை வணங்குகிறோம். நம்மிலி ருக்கும் ஆதே தூய ஆவியானவரை அவர் வணங்கும் நிலையும் ஏற்படுகிறது. நாம் நடமாடும் ஆலயம் என்பதை உணர்ந்து நமது குடும்பத்திலும் தனிப்பட்ட வாழ்விலும் மாற்றங்களைக் கொண்டு வரும்பொழுது, உலகம் முழுவதும் மாற்றத்திற்கு உட்படும். இத்தகையப் புதிய உலகத்தைத்தான் ஆண் டவர் ஏற்படுத்துவதாக எசாயா இறைவாக் கினர் வாயிலாக இன்று உணர்த்துகின்றார்.

வாருங்கள் அன்பு இறைமக்களே நாம் அனைவரும் ஒன்றித்த மக்களாக மகிழ்ச் சியுடன் இக்காலக்கட்டத்தில் இறைவனின் அளவற்ற அன்பைப் பகிர்ந்து வாழ்வோம். அதே அன்பை நாம் நம்மில் அனுப விப்போம்.

**"நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள். (யோவா 14:1)**

# உயிர்த்த ஆண்டவரில் உயிர்த்தெழுவோம்

"மேலொரு வாழ்வு உண்டு என்று, எம் மேலெழும் துன்பத்தை மறக்கின்றோம்" என்று அடிக்கடி நாம் திருப்பலியில் பாடுவதுண்டு. கிறிஸ்தவர்களாகிய நாம் சாவைக் கண்டு பயப்படத் தேவையில்லை. ஏனென்றால், சாவுக்குப் பின்னும் வாழ்வு உண்டு என்பதை திருஅவை மிகத் தெளிவாக நமக்கு தெளிவுப்படுத்தி வருகிறது. தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிற்றுக் கிழமையான இன்று நாம் கேட்கும் வாசகங்கள் அனைத்தும் உயிர்த்தெழுதலைப் பற்றியும், தூய ஆவி அருளும் நிலை வாழ்வைப் பற்றியும் நமக்கு நினைவூட்டுகின்றன.

பாஸ்கா பெருவிழாவை நெருங்கிக்கொண் டிருக்கும் நமக்கு "உயிர்த்தெழுதலின் செய்தி' மிகவும் இனைறியமையாதது. முதல் வாசகத்தில், "என் மக்களே! இதோ நான் உங்கள் கல்லறைகளைத் திறக்கப் போகி றேன். உங்களை உங்கள் கல்லறை களினின்று மேலே கொண்டு வருவேன். உங்களுக்கு இஸ்ரயேல் நாட்டைத் திரும்பக் கொடுப்பேன்."என கடவுள் உறுதியளித்தது இயேசுவில் நிறைவேறியது. நமக்கு விண்ணகமே புதிய இஸ்ரயேல்.

இவ்வுலகில் வாழ்வோர் சிலர் கடவுள் இல்லை என்றும், உயிர்த்தெழுதல் இல்லை என்றும் கூறுபவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். ஆனால், உயிர்த் தெழுதல் உண்டு என்று நம்பிக்கையூட்டும் வகையில் புனித பவுல் மீண்டும் இவ்வாறு கூறுகிறார், "பாவத்தின் விளைவாக உங்கள் உடல் செத்ததாயினும், கிறிஸ்து உங்களுள் இருந்தால், நீங்கள் கடவுளுக்கு ஏற்புடைய வர்கள் ஆக்கப்படுவீர்கள்; அதன் பயனாகத் தூய ஆவி உங்களுக்குள் உயிராய் இருக்கும்" என்கிறார் .

இறந்த மனிதர்களின் கல்லறைகளை திறக்க சொன்ன கடவுள், இன்று நற்செய்தி வழியாக உறுதி படுத்துகிறார் நம் ஆண்டவர். ஆம், ஆண்டவரின் நண்பர் இலாசர் இறந்து விட்ட செய்தியைக் கேட்டு பெத்தானியாவில் தங்கி விட்டார். இதை தெரிந்து கொண்ட மார்த்தா, இயேசுவிடம் முறையிட அவர் மறுமொழி யாக உன் சகோதரன் உயித்தெழுவான் என்றார். இது கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம்பிக்கை ஊட்டும் செய்தி. மேலும் இலாசரை கல்லறையில் வைத்து நான்கு நாள்கள் ஆயிற்று. கல்லை அப்புரப் படுத்தினால் நாற்றம் அடிக்குமே , உண்மை தான். ஆனால் நம் இதயக் கல்லைத் திறந்தால் எவ்வளவு நாற்றம் அடிக்கும் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். ஊனியல்பின் காரணமாக மனிதனாகப் பிறந்த நாம் பலவழிகளில் பாவம் செய் கிறோம். ஆனாலும், மனமாற்றமும் இரக்கச் செயல் களும் நமக்கும் உயிர்ப்பை உறுதிப்படுத்தும்.

உயிர்த்தெழுதலுக்குச் சான்று பகரும் பொருட்டு இறந்து போன லாசரைக் கல்ல றையினின்று இயேசு மீண்டும் உயிர்பெற்று எழச்செய்தார். ஊனுடலில் உயிர் பிரியும் போது உடல் மண்ணுக்குச் செல்கிறது. உயிர் நிலைவாழ்வு பெறும் பொருட்டு கடவுளிடமே திரும்புகிறது. இந்த உண்மையை உணர்ந்தோராய் நம் ஆவியை கடவளிடம் ஒப்படைத்து சாவின் மீது வெற்றிகொள்வோம்.உடலைக் கொல்பவர் களுக்கு அஞ்சாமல் கடவுளின் பணியை வீரத்துடன் செய்து முடிப்போம்.

*ASP ஜேம்ஸ் நாதன் ஸ்ரீ கெம்பாஙான்*

**தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு**

எசேக்/Ez 37: 12-14
உரோ/Rom வாசகம் 8: 8-11
யோவா/ Jn வாசகம் 11: 1-45

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் I**